## 20. தலைப்பு 20 – தேர்தல்கள் திணைக்களம்

-----------------------------------------------------------------------

### 20.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேர்தல்கள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 20.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 20.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேர்தல்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்களில் இங்கே (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்புக்கள் மற்றும் பின்வரும் 20.4 தொடக்கம் 20.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

02001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 972,966 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு இயலாது போயிற்று.

## 20.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) தேர்தல்கள் செயலகக் கட்டிடத்திற்கான சேர்ப்பு, அபிவிருத்தி, தேர்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறை மற்றும் இணைந்த கழிவறை, குளியலறை என்பவற்றைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகளுக்காக ரூபா 43,806,496 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டிடத் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 250,000 இனை விஞ்சுகின்ற வேலைகளுக்காக முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் கட்டிடத் திணைக்களத்துடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தக்காரருக்கு 2013 மார்ச் 08 ஆந் திகதியும் 2013 யூலை 08 ஆந் திகதியும் முறையே ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 12 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் (Retention Money) பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய பீசீ/24/2012 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பாரியளவிலான பழுதுபார்த்தலுக்கு செலவினங்களைச் செய்ய வேண்டியேற்படுகின்ற வாகனங்களை தேர்தல் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்த முடியாதெனினும், பழுதுபார்க்கக்கூடிய நிலையில் இருந்த அரசாங்கத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு வாகனம் 2012 செப்தெம்பர் 08 ஆந் திகதி நடைபெற்ற மாகாண சபை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பழுதுபார்த்தலுக்காக ரூபா 883,921 தொகையை தேர்தல்கள் திணைக்களம் செலவிட்டுமிருந்தது.

**20.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 32 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 13 | 06 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 481 | 338 | 143 |
| (iv) | ஆரம்ப நிலை | 158 | 143 | 15 |
| | மொத்தம் | 693 | 519 | 174 |

2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 174 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.